RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S14

# Elopement in the Tradition of Tamil Literature

## தமிழிலக்கிய மரபில் உடன்போக்கு

**A. Isbha** [a,*]

[a] Department of Tamil, Mahalakshmi womens college of arts and science, Paruthippattu, Chennai-600071, Tamil Nadu, India.

*Corresponding author Email: kaviyaazhinee@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S14

Received: 13-04-2022; Revised: 11-07-2022; Accepted: 17-07-2022; Published: 19-08-2022

**Abstract:** In ancient Tamil Nadu, countless literatures emerged in the world of Tamil literature due to the patronage of poets who knew the depths of the sea like Tamil Literature. A country's greatest wealth is its literature. Sangam literature is the best wealth we have in that respect. Poets had political knowledge along with literary knowledge. They became ministers and lifelong friends of the patrons who supported them. The patrons, seeing the poets, cheered like a child who has seen its mother. Many of the patrons in Kuruntokai literature have been celebrated by poets through their songs. Their bravery, excellence, military strength, fighting skills, the city they lived in, and historical references are also featured in the songs. This research paper has explained the pride of such patrons who have been established in this way.

**Keywords:** Kuruntokai, Tamil literature, Elopement, Tamil Nadu

**Language: Tamil**

## முன்னுரை

சங்க இலக்கியக் களம் தமிழரின் வாழ்வியல் களஞ்சியமாகத் திகழ்கிறது. ஏனெனில் எல்லா காலச் சூழல்களுக்கும் பொருந்துமாறு, எல்லா பரிமாணங்களையும் அடைந்தும் அதன் பொருண்மை நீர்த்து போகாத அளவுக்கு செழுமையுடையதாய் சங்க இலக்கியம் விளங்குகிறது. இதற்கு காரணம் சங்க இலக்கியங்கள் எக்காலத்துக்கும் பொருந்தும் வண்ணம் மானுட வாழ்வியலோடு ஒன்றியிருப்பதே ஆகும். இதனடிப்படையில் இங்கு உடன் போக்கை நோக்கலாம்.

தலைவனும் தலைவியும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டு, இனி தனித்து வாழ இயலாது என்கிற நிலையில் சமூகம் விதித்துள்ள முறைமைகளைத் தகர்த்து, தான் விரும்பும் ஆடவனுடன் இணைந்து வாழும் உரிமையைச் சுயமாக அடைந்தவளாய் தமிழிலக்கிய மரபில் பெண் இருந்துள்ளாள் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வடிப்படையில் பண்டைய காலத்தில் தலைவனும் தலைவியும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டு பிறருக்கு அறிவிக்க இயலாத மனநிலையில், தலைவனோடு தலைவி ஊரை விட்டு சென்று விடுகின்ற நிகழ்வையே உடன்போக்கு என்கிறனர். இத்தகு உடன்போக்கு தமிழிலக்கிய மரபில் எவ்விதத் தகுதியைப் பெற்றிருக்கிறது என்பதனையும், காலப்போக்கில் உடன்போக்கு என்கிற பொருண்மை எத்தகைய மாற்றங்களை அடைந்திருக்கிறது என்பதை குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## உடன்போக்கு உணர்த்தும் பொருண்மை

எதிர்பாலினத்தின் ஈர்ப்பை எவ்விதமான கட்டுப்பாடுகளும் தடுக்க இயலாது என்கிற உயிரியல் கோட்பாட்டை மானுடவியலின் அடிப்படைக் கூறுகளோடு தமிழிலக்கிய மரபு உடன்போக்கு என்கிற செல்லாடல் வழியாக பதிவு செய்துள்ளது.

களவு வாழ்க்கையை மேற்கொண்ட காதலர்கள் கற்பு வாழ்க்கைக்காக இருவரும் இணைந்து வாழ தன் இருப்பிடம் நீங்கி இடம்பெயர்வதை உடன்போக்கு என்று பொதுவான வரையறையை வகுக்கலாம். அதாவது களவு வாழ்க்கை மறுக்கப்படும் போது, இத்தனை ஆண்டுகள் வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களையும், உறவினர்களையும் விட்டு, தான் விரும்பிய தலைவனுடன் தலைவியானவள் செல்வதையே இது சுட்டுகிறது. இதனை 'தலைவனுடன் போதல்' அல்லது 'தலைவனுடன் உடன்பட்டு போதல்' என்கிற சொல்லாடல் வழியே சங்க இலக்கியம் உணர்த்துகிறது. மேலும் உடன்போக்கு என்கிற பொருண்மையை ஆங்கிலத்தில் 'டேட்டிங்' (Dating) என்கிற சொல்லாடல் வழியே சுட்டுகின்றனர். இந்த ஆங்கிலச்சொல்லுக்கு, தமிழ் அகராதி 'கூடப்போதல்' என்கிற பொருளையே சுட்டுகிறது.

## தமிழ் மரபில் - காந்தருவம் - ஐந்திணை - உடன்போக்கு

தமிழர் வாழ்வியலில் குடும்பம் என்கிற அமைப்பு உருவான பின்பு அது பல்வேறுபட்ட மாற்றங்களையும் வகைப்பாடுகளையும் அடைந்துள்ளதை அறியமுடிகிறது. சான்றாக நான்கு வேதங்களில் சொல்லப்பட்ட எட்டு வகைத் திருமணங்களில் அசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் மூன்றும் கைக்கிளைக்குரியனவாகவும், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும் பெருந்திணைக்குரியனவாகவும், காந்தருவம் அன்பின் ஐந்திணைக்குரியதாகவும் அமைகின்றன. இதில் குறிப்பிடத்தகுந்தது என்னவெனில் 'காந்தர்வ முறையே தமிழர் தம் காதல் முறையாகும்' என நற்றமிழ் இலக்கணம் சுட்டுகிறது (Paramasivam, 2015).

"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே

பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே

முதலோடு புணர்ந்த யாழோர் மேன

தவல் அருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே" (Shanmugam Pillai, 2011)

என்னும் நூற்பாவால் எண்வகை மணத்தைத் தொல்காப்பியம் பதிவுசெய்கிறது. மேலும் 'ஒத்த குலமும், குணமும், செல்வமும், ஒழுக்கமும், இளமையும், அன்பும் உடைய தலைவனும் தலைவியும் காதலித்து நுகரும் இன்பத்தையே ஐந்திணை என்றும், இஃதை அன்புடை காமம் எனவும் அழைப்பர்' என்று விளக்கம் அளிக்கிறது நற்றமிழ் இலக்கணம் (Paramasivam, 2015). இதே பொருண்மையை உணர்த்தும் நோக்கில் நம்பியகப் பொருள் பின்வருமாறு சுட்டுகிறது.

'ஐந்திணை உடையது அன்புடை காமம்'

'குறிஞ்சி பாலை முல்லை மருதம்

நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே' (Narayana Velluppillai, 2015)

இவ்வாறு அன்புடைக் காமம் பல்வேறு ஒழுக்க நிலைகளில் வெளிப்பட்டு (திணை -ஒழுக்கம்), ஐந்து வகைகளாகப் பிரிந்து, நிலத்தின் பெயரால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றாகி அன்பின் ஐந்திணை என்று அழைக்கப்படுகிறது.

மேலும் உடன்போக்கு செல்கின்ற தலைவனும் தலைவியும் எல்லா கட்டுக் காவல்களையும் மீறி, தோழியின் துணையோடு எவருக்கும் தெரியாத வகையில், இடைச்சுரமாகிய பாலை நிலத்தின் வழியாகச் செல்வது வழக்கமான ஒன்றாகும். இருப்பினும் அகத்திணைக் கொள்கையில், காதல் கொண்ட இருவரும் அறத்தொடு நின்று திருமணத்தை முடிப்பது ஒருவகை. இவ்வாறு அறத்தோடு நின்றால் அதன்பின்னர் உடன்போக்கு நிகழவே நிகழாது என்பதை சங்க இலக்கியங்களின் வழியே அறிய முடிகிறது. மற்றொரு வகையானது எவருக்கும் சொல்லாமல், காதல் கொண்ட தலைவனும் தலைவியும் உடன்போக்கு நிகழ்த்துவது. குறிப்பாக உடன் போக்கிற்கு பின் அறத்தொடு நின்றால் பயனொன்றுமில்லை அதாவது அத்தகைய வாழ்வு அறத்திலிருந்து வழுவிய வாழ்வையே சுட்டுகிறது என்பதை இதன் வழியே அறியமுடிகிறது.

## உடன்போக்கின் குறியீடு

உடன்போக்கு நிகழ்வதற்கு முன்னர் தலைவியிடத்தில் ஏற்படும் மாற்றங்களின் குறியீடு இங்கு கவனிக்கத்தக்கது. குறிப்பாக தலைவன் தலைவியரது காதல் வாழ்க்கை வெளியுலகுக்கு தெரிவதற்கு முன்னரே தோழி அறத்தொடு நிற்பாள். திருமணம் செய்து கொள்ளுமாறு தலைவனைக் கட்டாயப்படுத்துவாள். ஆனால் இவர்களது காதல் வெளிப்பட்டு மற்றவர்களால் பலவாறாக பேசப்படும் சூழலில் (அலர் தூற்றல்), தலைவிக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்து விடுமோ என்று தோழி அஞ்சுவாள். இருப்பினும் பெரியவர்களுக்கு இவர்களின் காதல் தெரிந்தவுடன், தலைவியவள் வெளியே செல்ல முடியாதவாறு இல்லத்திலே காவல் வைக்கப்படுவாள் (இற்செறித்தல்).

இதன் காரணமாக தலைவி தலைவனைச் சந்திக்க முடியாத பெரும் ஏக்கத்தினால் உடல் மெலிந்து போவதைக் கண்டு, உண்மை அறியாதவர்களாக, நற்றாய், செவிலித்தாய் போன்றோர் தெய்வக்குற்றம் என எண்ணி, முருகப் பெருமானுக்கு பூசை செய்வர் (வெறியாட்டு). இறுதியில் தலைவியானவள், அன்னை அறிந்தால் கோபப்படுவாளோ என அஞ்சியும், வேறு ஒருவருக்குத் திருமணம் செய்து விடுவாளோ (நொதுமலர் வரைவு) என்று மனம் கலங்கியும் இருக்கின்ற வேளையில், தோழியின் உதவியோடு தலைவனும் தலைவியும் உடன்போக்கு நிகழ்த்துவர். தலைவியின் மனதில் ஏற்படும் தலைவன் குறித்த இப்பேரழுத்தமே உடன்போக்கிற்கு வழிவகுக்கிறது என்பதை இதன் வழியே அறிய முடிகிறது.

## உடன்போக்கு நிகழக் காரணங்கள்

அகவாழ்க்கைக்கும், புறவாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்து, அதன்படி வாழ்ந்து காட்டியவர்கள் தமிழர்கள். தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் களவு வாழ்க்கையில் விரும்பிய பின்னர் பல்வேறு நிலைகளில் சந்திப்புகள் நிகழும். அதாவது இயற்கையாக ஓரிடத்தில் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் இயல்பாக சந்தித்து, உள்ளத்தால் இணைந்து, புணரும் புணர்ச்சியும் (இயற்கைப் புணர்ச்சி), பெருமானக்காதலின் காரணமாக தலைவன் இயற்கைப்புணர்ச்சியில் கண்டு கலந்த தலைவியை முன் பார்த்த அதே இடத்தில் மீண்டும் சந்திக்க வருதலும் (இடந்தலைப்பாடு) அதுமட்டுமல்லாது பகற்காலத்தில் தலைவியின் இல்லத்திற்கு வெளியே உள்ள இடங்களில் தலைவனும் தலைவியும் சந்தித்துக் கூடுதலும் (பகற்குறி), இரவுக் காலத்தில் தலைவியின் இல்லத்திற்கு உட்பட்ட இடங்களில் தலைவனும், தலைவியும் சந்தித்து கூடுதலும் (இரவுக்குறி), காதலின் உச்சத்தில் தோழனின் துணைக்கொண்டு தலைவியைத் தலைவன் பார்க்க வருதலும் (பாங்கற் கூட்டம்), தோழியின் துணையால் தலைவனும் தலைவியும் சந்தித்தலும் (பாங்கியற் கூட்டம்) என்று பல்வேறு நிலைகளில் இருவரும் இன்புற்று வாழும் காலத்தில், நாட்கள் செல்ல செல்ல தலைமக்களின் களவு வாழ்க்கையில், பெரியவர்களின் இடையூறுகளும், பல விதமான தடைகளும் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், திருமணம் செய்துகொள்ள மறுப்பும் தெரிவிப்பர். அப்போது,

"உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும் செயல்தீர்

காட்சிக் கற்புச் சிறந்தன்று" (Shanmugam Pillai, 2011)

என்பதற்கிணங்க, கற்பு நாணைக் காட்டிலும் சிறந்தது என்னும் நோக்கில், தலைவனும் தலைவியும் தங்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில், காதல் வாழ்வினைக் காப்பாற்றிக் கொள்ளவும், கற்பு வாழ்வினைப் புனிதமாக்கிக் கொள்ளவும், உடன்போக்கு நிகழ்த்துவர். இன்னும் சொல்லப்போனால், வேறு வழியின்றி தலைவன், தலைவி, தோழி மூவரும் சேர்ந்தெடுக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக உடன்போக்குக் கருதப்படுகிறது.

## உடன் போக்கின் பகுப்புகள்

தலைவன் தலைவி சார்ந்த உடன் போக்கு என்னும் இச்சுய விருப்பச்செயல்பாட்டைச் சங்க இலக்கியங்கள் பல்வேறு முறைமைகளில் பகுத்துள்ளன. இதனடிப்படையில் நோக்கும் போது தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஒன்று சேர்ந்து செல்லும் உடன்போக்கு எட்டு வகைகளைக் கொண்டதாக அறியமுடிகிறது. அவை

"போக்கு அறி வுறுத்தல் போக்குடன் படாமை

போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்

போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றலென்று

யாப்பமை உடன்போக்கு இரு நான்கு வகைத்தே" (Narayana Velluppillai, 2015)

என்னும் நூற்பாவின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம்.

- போக்கு அறிவுறுத்தல் என்பது தலைவியை உடன் அழைத்துச் செல்லுமாறு தோழி தலைவனுக்கு அறிவுறுத்தல் பொருண்மையில் சுட்டப்படுகிறது. (Puliyur Kesikan, 2008; Vidhwan Durai Rasaram, 1996).
- போக்கு உடன்படாமை என்பது தோழி கூறியவாறு உடன்போக்காகச் செல்வதற்கு தலைவனும் தலைவியும் மறுத்துக் கூறுதல் குறித்த பொருண்மையைச் சுட்டுகிறது, (Puliyur Kesikan, 2008; Vidhwan Durai Rasaram, 1996).
- போக்கு உடன்படுத்தல் என்பது உடன்போக்காய் அழைத்துச் செல்வதைத் தவிர தலைவிக்கு எவ்விதத்திலும் பாதுகாப்பு இல்லை என்று கருதி, தோழி தலைவனிடம் கூறுவதும், தலைவனுடன் செல்வதே சிறந்தது என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் கற்பு மேம்பாட்டையும் நிலைநிறுத்தி, உடன்போக்கு செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தோழி தலைவியிடம் எடுத்துக் கூறுதலுமாகிய நிலையை கூறுதல். இவ்வாறு தலைவன் தலைவியரிடையே இருக்கும் அன்பொழுக்கத்தை எடுத்துக்கூறி உடன்போக்கிற்கு உடன்பட செய்தல் வினையைப், போக்கு உடன்படுத்தல் சுட்டுகிறது. (Vidhwan Durai Rasaram, 1996; Vidhwan venkataraman, 2018).
- போக்கு உடன்படுதல் என்பது தோழியின் அன்பு மிகுந்த உரைகளைக் கேட்டு தெளிந்த தலைவனும் தலைவியும் உடன்போக்குச் செல்வதற்கு சம்மதம் அளித்தலையே இது சுட்டுகிறது (Vidhwan Durai Rasaram, 1996; Vidhwan venkataraman, 2018).
- போக்கல் என்பது உடன்போக்காகச் செல்வதற்கு தலைவனும் தலைவியும் உடன்பட்ட பிறகு, அவர்களிருவரும் செல்வதற்கு தோழி வழியமைத்துக் கொடுத்தலை உணர்த்துகிறது (Vidhwan Durai Rasaram, 1996).
- விலக்கல் என்பது உடன்போக்குச் சென்ற தலைவியின் இயலாமையால் ஏற்பட்ட தளர்ச்சியைக் கண்டோர், அவள்மீது இரக்கம் காட்டுதல் ஆகும். மேலும் உடன்போக்கை விலக்கிக்கொண்டு தங்கள் இருப்பிடத்திலேயே தங்கிக் கொள்ளுமாறு கூறுதலின் பொருண்மைச் சுட்டுகிறது (Puliyur Kesikan, 2008; Vidhwan Durai Rasaram, 1996).
- புகழ்தல் என்பது தலைவன் தலைவியை உடன் போக்கின் காரணமாக பாலை வழியில் கொண்டு செல்லும்போது தலைவிக்கு களைப்பு தெரியாத வகையில், அவளை அவன் புகழ்ந்து கூறுதலை அடிப்படையாகக் கொண்டமைகிறது (Vidhwan Durai Rasaram, 1996)
- தேற்றல் என்பது தலைவன் பாலைநில வழியில், இயலாமை காரணமாக தளர்ச்சியடைந்து தங்கிய தலைவியிடம், தனது ஊர் அருகில் தான் உள்ளது என்று கூறி தலைவியைத் தேற்றுதலைச் சுடுகிறது (Vidhwan Durai Rasaram, 1996).

இவ்வாறு உடன்போக்காகச் செல்லுமாறு தோழி அறிவுரை வழங்குவதிலிருந்து தலைவனும் தலைவியும், தலைவனது ஊர் செல்வது வரையிலான, மொத்த நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாக உடன்போக்கின் வகைகள் காணப்படுகின்றன. இப்பகுப்பின் வகைப்பாடுகளே தமிழரின் செழுமைமிகு வாழ்வியலுக்கான சான்றாக அமைந்துள்ளன என்பதையும் இதன் வழியே அறியமுடிகிறது.

## உடன்போக்கும் சமூகக்கலப்பும்

"நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்

நாட்டினர் தாம் வியப்பெய்தி, நன்றாம் என்பர்!

ஊடகத்தே கிணற்றோரத்தே, ஊரினிலே

காதலென்றால் உறுமுகின்றார்!

பாடை கட்டி அதனைக் கொல்ல,

வழிகள் செய்வார்! பாரினிலே பொறாமையினால்

மூடரெல்லாம் விதிகள் செய்து,

முறை தவறி இடர் செய்து கெடுகின் றாரே!"

என்று பாரதியார் குயில்பாட்டில் கூறுவது முற்றிலும் உண்மையாகும். ஏனெனில் காதல் கொண்ட தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ முடியாத போது உடன்போக்கை நிகழ்த்துவர். மேலும் சங்ககாலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நில மக்களுக்குள்ளும் கலப்புத் திருமணம் இருந்ததனை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. இன்று கலப்பு திருமணம் பெரும்பாலும் உடன்போக்குத் திருமணமாகவே காணப்படுகிறது. ஏனெனில் பெற்றோர்களும், உடன் பிறப்புகளும், உறவினர்களும் களவொழுக்கத்திற்கு சம்மதிக்காத வேளையில், வேறுவழியின்றி சாதி மதங்களைக் கடந்து காதல் கொண்ட இருவரும் உடன் போக்கு சென்று அரசு அலுவலகத்தில் பதிவுத் திருமணம் செய்து கொள்கின்றனர். இத்தகு கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு தமிழக அரசு, பல நலத்திட்ட உதவிகளைச் செய்து வருகின்றது. இதனடிப்படையில் நோக்கும் போது பிரிவினைகள் அற்ற சமூக இருத்தியலுக்கு உடன்போக்கு துணைநிற்பதை அறியமுடிகிறது.

## உடன்போக்கின் வளர்ச்சிதை மாற்றம்

மானுட இனத்தின் பாலியல் விடுதலையில் ஏற்படுத்தப்பட்ட தடைகள் பேரழுத்தத்திற்கு உட்பட்டு மாறுபட்ட வாழ்வியல் முறைகளைக் கடைபிடிக்கத் தொடங்கியதைத் தற்காலத்தில் அறியமுடிகிறது. குறிப்பாக இடைக்காலத்தில் தமிழ் மரபுக்கு ஒவ்வாத வாழ்க்கை முறைகளும், பழக்க வழக்கங்களும், சடங்குகளும் பெருகிவிட்டன. நாம் தமிழ் நிலத்தில் வாழ்கிறோமே தவிர அதன் பண்பாட்டுக் கூறுகளை உள்வாங்கி வாழவில்லை என்பதே உண்மை. மேலை நாட்டு பண்பாட்டு ஈர்ப்பில் கண்டதும் காதல், கொண்டதும் மோகம் என்பன போன்ற புரிதலற்ற உறவு நிலைகள் மேலோங்குவதையும் இங்கு அறியலாம்.

ஒருவரை ஒருவர் சந்தித்து (Meeting), உரையாடி (Chating), மனம் ஒன்றி இன்புற்று வாழும் வாழ்க்கை முறையாக (Dating) காணப்படுகின்றது. இது நிலையானதா அல்லது நிலையற்றதா என்கிற அறிவார்ந்த சிந்தனையிலிருந்து உணர்ச்சிவயப்பட்ட நிலையே இவ்வுறவு நிலைகளில் பெரிதும் காணப்படுகிறது.

பிடித்தால் குடும்பம் என்கிற கட்டமைப்புக்குள் வாழலாம், இல்லையேல் பிரியலாம். இவ்வாழ்வியல் தற்கால சட்டத்திற்கும் அப்பாற்பட்ட உறவு முறையாக விளங்குகிறது. தலைவனும் தலைவியும் ஒருவர் மீது ஒருவர் நட்பு கொண்டு, மனம் ஒருமித்து, நாளடைவில் இருவரும் தங்களது நட்பினைக் காதலாக்கி, திருமணமாகாமலே உறவுகளுக்கு தெரியாமல், கணவன் மனைவி போல் ஒன்றி வாழ்வர். இதனை Living together என்பர். Living together வாழ்க்கையை வாழுகின்ற பெரும்பாலான காதலர்கள், உடன்போக்கு திருமணத்தையும், நிச்சயிக்கப்பட்ட திருமணத்தையும் மேற்கொள்வதில்லை.

ஒருவேளை அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், தாங்கள் அதுவரை இணைந்திருந்த வாழ்க்கையை விட்டுவிட்டு, சுமூகமாகவே பிரிந்து செல்வார்கள். மேலும் அவர்கள் இந்தப் புரிதலோடு தான் பழகவே செய்வார்கள். இச்சமகாலச் சூழலில் களவொழுக்கத்தில் வாழும் ஆணும் பெண்ணும் உடன் அழைத்து போகிறவர்களைப் பற்றி எதுவும் தெரியாமலே தங்களது வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள்.

இதில் பாதிக்கப்படுவது பெரும்பாலும் பெண்கள் மட்டுமே. பாலியல் வன்முறை, பெண்களை கடத்திச் செல்லல், ஆசை வார்த்தைகளுக்கு இணங்க வைத்தல் போன்ற ஒழுக்கக்கேடான செயல்களுக்கு அதிகமாக ஆளாகின்றனர். ஆராயுங்கால், சங்ககால உடன்போக்கு நிகழ்விற்கு எதிரிடையான வாழ்க்கை முறையாகவே இன்றைய காதல் வாழ்க்கை உள்ளது என்பதில் எள்ளளவும்

ஐயமில்லை. சமூகக் கட்டமைப்புகளை மீறி வாழும் இத்தகைய வாழ்வியல் முறைகள் தற்காலத்தில் பெருகியுள்ளதையும் இதன் மூலம் புரிதலற்ற வாழ்வியல் பெருகியுள்ளதையும் அறிய முடிகிறது.

## முடிவுரை

தமிழிலக்கிய மரபில் களவொழுக்கத்தின் அடுத்தநிலையாக உடன்போக்கு அமைந்துள்ளதையும் அது ஒரு ஒழுக்க நெறியாக போற்றப்பட்டுள்ளதையும் இவ்வாய்வு உறுதிசெய்கிறது. சங்க காலத்தில் உலகோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்போக்கு, காலப்போக்கில் தமிழ்ச்சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட, சாதி, மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வு உள்ளிட்ட பல்வேறு பிரிவினைகளால் அவ்வுரிமை மறுக்கப்பட்டுள்ளதையும், அத்தகைய செயல்பாடு வாழ்வின் ஒழுக்கப்பிழை என்று பழிக்கப்பட்டுள்ளதையும் ஒப்பிட்டு நோக்குகையில் அறியமுடிகிறது. தமிழர் வாழ்வியலில் அகம் சார்ந்த பதிவுகளை முன்னிறுத்தி இலக்கிய பிரதிகள் எப்படி உருவாக்கப்பட்டதோ அதே தன்மையில் நவீன கால எழுத்து மற்றும் காட்சி ஊடகங்களிலும் அகம் சார்ந்த வாழ்வியல் முன்னிறுத்தப்படுவதையும் அறியமுடிகிறது. குறிப்பாக இதனடிப்படையில் பண்பாட்டுச்சூழலில் மாற்றங்கள் நிகழ்ந்து வருவதையும் இவ்வாய்வு பதிவுசெய்கிறது. உடன்போக்கின் நுட்மான மாறுதல்களால் பல்வேறு வகைபாடுகள் இப்பொருண்மையில் உருவாகியுள்ளதையும் அதே பொருண்மை நவீன காலத்தில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளதையும் ஒப்பிட்டு நோக்குகையில் அறியமுடிகிறது. உலகோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்போக்கு நெறியில் தற்கால வாழ்வியல் மாறுதல்களால் உடன் போக்கு என்கிற பொருண்மை வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுவதையும் முழுமையான புரிதலற்ற ஆண் பெண் மன இணைவால் பிற்காலத்தில் இருவருக்குமான பிரிவுகள் அதிகரிப்பதையும் இவ்வாய்வு சுட்டுகிறது. ஆண் பெண் இருபாலினத்திற்கான சுதந்திரமான மனநிலையை வழங்குவதாலும் அது சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைய வழிவகை செய்வதாலும் உடன் போக்கை சமகால ஒழுக்க நெறியாக கருதவேண்டும் என்பதோடு புரிதலற்ற உடன்போக்கு வாழ்வியல் சிதைவுக்கு வழி வகுக்கும் என்பதையும் இவ்வாய்வு நிறுவுகிறது.

## References

Narayana Velluppillai, M., (2015) Nambiyagap Porul Thelivurai, Mulai Niliyam, Chennai, India.

Paramasivam, SO., (2015) Natramil Ilakkanam, Pattu Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Kurunthogai Thelivurai, Paari Nilayam, Chennai, India.

Shanmugam Pillai, M., (2005) Tholkkapiyam Porulathigaram, Mulai Niliyam, Chennai, India.

Vidhwan Durai Rasaram, (1996) Pathinenkilkanakku Thelivurai, Mulai Niliyam, Chennai, India.

Vidhwan venkataraman, H., (2018) Nattrinai Moolamum Uraiyum, U.Ve.Sa library, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

A. Isbha, Elopement in the Tradition of Tamil Literature, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 18-23. DOI: https://doi.org/10.54392/ijmrd223S14